களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்விதழ்
KALANJIYAM International Journal of Tamil Studies

# பண்பாட்டுக் கூறுகளும் பயன்தரு குறள்களும்

**சா.சிவானந்தம் எம்.ஏ, பி.எட்.,(எம்.ஏ),**

முதுகலைத் தமிழாசிரியர்,

தி யுனைடெட் பப்ளிக் பள்ளி,

பெரியநாயக்கன்பாளையம்,

கோவை - 641020.

மனித வாழ்வைச் செம்மைப்படுத்தும் கூறுகளாக இலக்கியங்கள் திகழ்கின்றன. இலக்கியங்கள் பாடலின் உட்கருத்துகளை எடுத்துரைப்பது மட்டுமல்லாது வாழ்வியல் நெறிகளைக் கூறி அவ்வழியில் அழைத்துச் செல்கின்றன. வாழ்வியல் நெறி, பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் அமைகின்றது. தனிமனிதன் தன்னுடைய இலக்கினை அடையக்கூடிய பாதையாகப் பண்பாடு விளங்குகின்றது. சங்க காலந்தொட்டு இன்று வரை தமிழர்கள் தனக்கே உண்டான பண்பாட்டு நெறிகளை முறையாகப் பின்பற்றி வருகின்றனர். பண்பாட்டுக் கூறுகள் அறநெறி, விருந்தோம்பல், இல்லறம், ஈகை, உயிரிரக்கம், அக வாழ்வு, புற வாழ்வு என்ற நிலைகளைக் கொண்டு அமைகின்றன. இந்தப் பண்பாட்டுக் கூறுகள் திருக்குறளில் அமைந்துள்ள பாங்கினை விளக்குமாறு இக்கட்டுரை அமைகின்றது.

## பண்பு – பொருள்

தனிமனிதனை உயரிய நெறிக்கு அழைத்துச் செல்லும் கூறு பண்பு என்பதாகும். பண்புள்ள மனிதன் தன்னுடைய வாழ்க்கையைச் சிறப்பான முறையில் எடுத்துச்செல்கின்றான். தன் வாழ்க்கையின் நெருக்கமான சூழல்களில் உள்ளவர்களின் உணர்வினைப் புரிந்து அதற்கேற்றவாறு தன்

நடத்தையைக் கொண்டு செல்லும் பக்குவம் பண்பு எனும் குணத்தில் அமைகிறது. இதனை,

**"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்"**

(**கலித்தொகை பாடல் எண்.**133)

எனும் அடியில் கலித்தொகை எடுத்துரைக்கிறது. பண்பு எனும் சொல்லடியில் இருந்து பண்பாடு எனும் சொல் உருவாகின்றது. பண்புடைய மனிதன் பண்பாட்டை உரிய முறையில் பாதுகாக்கின்றான். அந்த வகையில் தமிழரின் பண்பாடு சிறந்து விளங்குகிறது.

## விருந்தோம்பல் பண்பாடு

தமிழர்களின் பண்பாட்டில் சிறந்தது விருந்தோம்பல் ஆகும். வீட்டிற்கு வருபவர்களை இனிய சொற்களால் பேசி அவர்களுக்கு உணவு அளிக்கும் பண்பு என்பது உயரிய நெறி ஆகும். இத்தகைய விருந்தினை நாள்தோறும் அளித்து வருபவர்களுக்குத் துன்பம் என்பதே இல்லை என்கிறார் வள்ளுவர். இதை,

**"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**

**பருவந்து பாழ்படுதல் இன்று"**

(**திருக்குறள் எண்.**83)

எனும் குறட்பாவில் அறியலாம். விருந்தினர் என்போர் புதியதாக வருபவர்கள். அதாவது விருந்து எனும் சொல்லுக்குப் புதியது என்று பொருள். எனவே, புதியதாக வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்க வேண்டும் என்பதை,

**" விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்**

**வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்**

**திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்**

**எழுதல் முன் மகிழ்வன செப்பல்…”**

(**காசிக்காண்டம் பா.எ.17**)

எனும் பாடலின் மூலம் அறியலாம். எனவே தமிழர்களின் உள்ளத்தில் விருந்தோம்பல் பண்பாடு சிறந்து விளங்கிய தன்மை அறியமுடிகிறது.

## இல்லறவொழுக்கப் பண்பாடு

இல்லறவொழுக்கத்தின் பண்பாடு அன்பு நிறைந்த வாழ்க்கை ஆகும். கணவன் மனைவி இருவரும் இணைந்து அன்பு செலுத்தி தனக்குரிய அறங்களைச் செய்து வாழ்வது இல்லற நெறியாகும். இதை,

**”அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது”**

(**திருக்குறள் எண்.45**)

எனும் குறட்பாவில் வள்ளுவர் கூறுவதை அறியலாம். இல்லற வாழ்வை இனிய வாழ்வாக எடுத்துச் செல்லும் இணையர்களின் வாழ்வு நல்லறமாக அமையும் என்பது இங்கு புலனாகிறது. பிணை மான் இரண்டும் நீர் அருந்த செல்கிறது. சுனையில் சிறிதளவே நீர் காணப்பட்டது. அதனால் ஆண் மான் வாயை மட்டும் வைத்து நீர் அருந்துவது போன்று நடித்து தனது இணையான பெண் மானுக்குத் தண்ணீர் கொடுத்தது.(ஐந்திணை ஐம்பது பாடல் எண்.38) இக்காட்சிக்கு இணையாகத் தமிழர்கள் தங்களது இல்லறப் பண்பாட்டை வழிநடத்திச் சென்றுள்ளனர்.

## ஈகை – பண்பாடு

தமிழர்கள் பிறர்க்கு ஒரு பொருளைக் கொடுக்க வேண்டும் என்றால் இல்லையென்று பாராமல் வாரி வழங்கினர். சங்க காலம் தொட்டு இன்று வரையிலும் ஈகை குணத்தில் தமிழர்கள் சிறந்து விளங்குகின்றனர். மன்னனைக் காண புலவர்கள் சென்றால் தாங்கள் இயற்றிய பாடல்களுக்கு ஏற்ப மன்னர்கள் தங்களது கொடைத்திறனில் உயர்ந்து விளங்கியிருந்தனர். ஈகைப் பண்பாடு என்பது அனைவருக்கும் கொடுப்பது அன்று. இல்லாத வறியவர்களுக்கு வாரி வழங்குவது ஆகும் என,

**"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**

**குறியெதிர்ப்பை நீர துடைத்து"**

(**திருக்குறள் எண்.**221)

எனும் குறட்பாவில் வள்ளுவர் விளக்குகிறார். ஒருவனின் நிலையைக் கண்டு அவன் கேட்கும் முன்பாகவே அவனுக்கு உதவும் பண்பு பெரும்பான்மையான தமிழர்களிடையே காணப்பட்டது. அந்த வகையில் வள்ளுவர் இவ்வாறு உதவுபவனின் குடி உயர்ந்த நிலை கொண்டு காணப்படும் என்று,

**"இலனெனும் எவ்வம் உரையாமை ஈதல்**

**குலனுடையான் கண்ணே உள"**

(**திருக்குறள் எண்.**223)

எனும் பாடலில் எடுத்தியம்புகிறார். வறியவராக ஒருவன் வந்து நின்றவுடன் அவனின் நிலையை அறியக்கூடிய உளவியல் கூறு தமிழர்களிடம் காணப்பட்டது இங்கு புலப்படுகிறது.

## உயிரிரக்கப் பண்பாடு

மனிதநேயம் அனைத்து உயிர்களுக்கும் பொதுவான ஒன்றாகும். மனிதநேயப் பண்பு என்பது, ஓரறிவு முதல் ஆறறிவு உயிர் வரை அனைத்தும் முறையாகப் பின்பற்றும் நெறியாகும். உயிரிரக்க நெறி வாழ்வின் இன்பத்தை அளிக்கக் கூடிய சிறந்த பண்பாடு ஆகும். இதை வள்ளலார்,

**"உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்"**

(**வள்ளலார் பாடல் தொகுப்பு பாடல் எண்.278**)

என்று கூறுகிறார். சங்க கால மக்களின் பெரும்பாலான உணவு ஊண் உணவாகவே காணப்பட்டது. ஆனால், அந்நிலையிலும் அவர்கள் உயிர்களைக் கொல்லக் கூடாது என்ற நோக்கோடு அங்கு கிடைக்கும் பழங்கள், காய்கறிகளை உட்கொண்டனர். பிற உயிரைத் துன்புறுத்தாது வாழும் வாழ்க்கை மனிதனின் வினைப்பிறவிகளைக் கழிக்கும் கூறு என்பதையும் உணர்ந்தனர். இக்கருத்தினைக் கொண்டு சைவ சமய அடியார்களும் வைணவ ஜீயர்களும் தங்களது பாதையினை வகுத்துக் கொண்டனர். சைவ சித்தாந்த ஆசிரியர்கள் உயிரிரக்க நெறியைத் தனது மெய்ஞ்ஞான சாத்திரத்தில் எடுத்து விளக்குகின்றனர். பிற உயிர்களைக் கொல்லாது உணவு உண்பவரை அனைத்து உயிர்களும் தொழுது வணங்கும் என்று வள்ளுவர் கூறுகிறார். இதை,

**"கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா**

**உயிரும் கைக்கூப்பித் தொழும்"**

(**திருக்குறள்.புலால் மறுத்தல் குறள் எண்.260**)

எனும் குறட்பாவில் அறியலாம். எனவே, அக்கால மக்களின் பெரும்பான்மையான உணவு ஊண் உணவாக இருந்தாலும் அவர்கள்

பழங்கள், காய்கறிகள் உட்கொண்டது மூலம் அவர்களின் உயிரிரக்கப் பண்பு வெளிப்படுவதை உணர முடிகிறது.

## அகவாழ்க்கை

உள்ளத்து அன்பு என்பது ஆண் பெண் இருவருக்கும் பொதுவான ஒன்றாகும். இந்த அன்பு, அகவாழ்க்கை எனும் பண்பாட்டினைச் சார்ந்து அமைகிறது. அந்த வகையில் தலைவன் தலைவியைக் காண்பதும் பின்பு தோழியிடம் தலைவியைப் பற்றி வினவுவதும் தோழி தலைவனை ஆராய்வதும் பின்பு களவு வாழ்க்கைத் தொடங்கி கற்பு வாழ்க்கையில் முடிவது இப்பண்பாடு ஆகும். இப்பண்பாடு சங்க கால மக்களிடம் முறையாகக் காணப்பட்டது. தலைவன் தலைவியைக் கண்டவுடன் தலைவியின் அழகை இயற்கையோடு ஒப்பிட்டுக் கூறுகிறான். இதைத் தொல்காப்பியர் ஆறு பகுதிகளாகப் பிரித்து விளக்குகிறார். (தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை பக்க எண்.278) இந்நிலையை வள்ளுவர்,

**”மதியும் மடந்தை முகனும் அறியா**

**பதியின் கலங்கிய மீன்”**

(**திருக்குறள் நலம்புனைந்துரைத்தல் குறள் எண்.1116**)

எனும் குறட்பாவின் வழி விளக்குகிறார். தன் தலைவியின் முகத்தைக் கண்ட விண்மீன் நிலவா? பெண்ணின் முகமா? என்பது அறியாமல் கலக்கமுற்றது என்று தலைவன் எடுத்துரைக்கின்றான். இதன் மூலமாகத் தலைவனின் உயர்ந்த உள்ளத்தன்பு வெளிப்படுகிறது. இது போன்றே தலைவி, தன் தலைவனின் அன்பை அளாவிய நிலையில் எடுத்துரைத்துரைக்கிறாள். இதை,

**”கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்**

**எழுதேம் கரப்பாக்கு அறிந்து”**

(**மேலது 1127**)

எனும் பாடலால் அறியலாம். எனவே, தலைவனும் தலைவியும் ஒத்த அன்புடன் தன்னுடைய அகவாழ்வில் சிறந்து விளங்கிய பண்பாடு என்பது இதன் மூலமாகத் தெளிவடைகிறது.

## புறவாழ்வு

தமிழர்களின் வீரம். புகழ், கொடை முதலியன வெளிப்படுத்தும் வாழ்க்கை புற வாழ்க்கை ஆகும். புறவாழ்க்கைப் பண்பாடு என்பது போர் நெறிகளை உள்ளடக்கியது. தமிழர்கள் போர் புரிவதில் கூடத் தங்களுக்கு உண்டான நெறியினை வகுத்துக் கொண்டுள்ளனர். போருக்குச் செல்லும் போது படை பலம் என்பது இன்றியமையாதது. இப்படை பலம் அனைத்தும் நிறைந்ததாகவும் எதற்கும் அஞ்சாது இருக்க வேண்டும் என,

**"உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்**

**வெறுக்கையுள் எல்லாம் தலை"**

(**மேலது 761**)

எனும் குறட்பாவில் வள்ளுவர் கூறுகிறார். தன்னை எதிர்த்து வந்த அனைத்துப் படை வீரர்களையும் ஒருவர் கூட இல்லாது தமிழர்கள் அழித்துள்ளனர். இதை,

**"தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த**

**போர்தாங்கும் தன்மை அறிந்து"**

(**மேலது 767**)

எனும் குறட்பாவால் அறிய முடிகின்றது. எனவே, போர் நெறி என்பதை வகுத்து அதன்படி சரியாகக் கடைப்பிடித்து தமிழர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

## தொகுப்புரை

பண்பாடு என்பது நாட்டை வளர்ச்சி நிலைக்கு எடுத்துச் செல்லும் கூறு ஆகும். பண்பாடுகள் சரிவர செயல்பட்டாலே சிறந்த நாடு என்றும் கூறுவர். அந்த வகையில் தமிழர்கள் ஒவ்வொரு பண்பாட்டிலும் சிறந்து விளங்கினர். இதனால் தமிழகம் மற்ற நாடுகளுக்கு எடுத்துக்காட்டுகளாக இருந்ததுள்ளது. எனவே, இத்தகைய சிறப்பு மிக்க பண்பாட்டுக் கூறுகள் தமிழர்களிடம் அமைந்த விதம் குறித்தும், அப்பண்பாடு ஒவ்வொன்றிலும் தமிழர்கள் தங்களது பாதையைக் கொண்டு சென்ற திறம் குறித்தும் ஆராயப்பட்டு விளக்குவதாக இவ்வாய்வின் முடிவுகள் அமைகின்றன.

## துணைநின்ற நூல்கள்

1. கலித்தொகை
2. காசிக்காண்டம்
3. குறுந்தொகை
4. திருக்குறள்
5. தொல்காப்பியம்
6. வள்ளலார் பாடல்கள்.